**சுருக்கம்**

ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் - மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் மத்திய அரசின் கீழ் அமுல்படுத்தப்படும் திட்டங்களை கண்காணிக்கவும் செயல்படுத்தவும் அம்மாநகராட்சிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் அதற்கென பணியிடங்களை தோற்றுவித்து அதற்கான செலவினத்தை மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் ஈடு கட்டுதல் – ஆணை வெளியிடப்படுகிறது,

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (ந,நி.2) துறை**

**அரசாணை (2டி) எண் 105** **நாள் : 26.06.2007**

படிக்கப்பட்டது :

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண். ந.க. எண். 550 / 2007/ எம.ச. 4
நாள் 21.05.2007.

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புதுப்பித்தல் திட்டத்தில் கீழ்கண்ட திட்டங்கள் மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும். அந்த மாநகராட்சிகளில் மத்திய அரசின் கீழ் அமுல்படுத்தப்படும் திட்டங்களை கண்காணிக்கவும் (மற்றும்) செயல்படுத்தவும் அம்மாநகராட்சிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் அதற்கென பணியிடங்களை தோற்றுவித்து அதற்கென செலவினத்தை மத்திய அரசின் ஜவகர்லால் நேரு தேசிய நகர்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் ஈடு கட்டலாம் என தெரிவித்துள்ளார்.

<u>மதுரை மாநகராட்சி</u>

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. | வைகை குடிநீர்த் மேம்பாட்டுத் திட்டம் | 59.32 |
| 2. | திடக்கழிவு மேலாண்மை | 75.31 |
| 3. | வைகை ஆற்றில் மூன்று இடங்களில் தடுப்பணை கட்டுதல். | 4.77 |
| 4. | நகர்ப் பகுதியில் உள்ள ஏழைகளுக்கான அடிப்படை வசதி | |
| | திட்டம் I | 103.58 |
| | திட்டம் II | 26.86 |
| | **மொத்தம்** | **269.84** |

<u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. | குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் பில்லூர் – II | 113.74 |
| 2. | திடக்கழிவு மேலாண்மை | 98.08 |
| 3. | நகர்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதி திட்டம் I | 58.82 |
| 4. | நகர்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதி திட்டம் II | 199.94 |
| | **மொத்தம்** | 470.58 |

**மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் பணியிடங்கள் விபரம் (ஒவ்வொரு மாநகராட்சிக்கும்)**

(ரூ. இலட்சங்களில்)

| வ. எண் | பணியின் பெயர் | ஊதிய விகிதம் | சுராசரி ஊதியம் | பணியிடங்களின் எண்ணிக்கை | மொத்த செலவினம் வருடத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | கண்காணி ப்பு பொறியாளர் | 14300-400-18300 | 3.91 | 1 (ஒன்று) | 3.91 |
| 2. | செயற் பொறியாளர் | 10000-325-15200 | 3.06 | 2 (இரண்டு) | 6.12 |
| 3. | உதவி செயற் பொறியாளர் | 8000-275-13500 | 2.63 | 4 (நான்கு) | 10.52 |
| 4. | உதவிப் பொறியாளர்/ இளநிலைப் பொறியாளர் | 6500-200-10500 | 2.10 | 8 (எட்டு) | 16.80 |
| 5. | வரைவு அலுவலர் | 5500-175-9000 | 1.81 | 4 (நான்கு) | 7.24 |
| 6. | தொழில்நுட்ப உதவியாளர் | 4500-125-7000 | 1.4 | 16 (பதினாறு) | 23.20 |
| 7. | கணக்கு அலுவலர் | 6500-200-10500 | 2.10 | 1 (ஒன்று) | 2.10 |
| 8. | கண்காணிப்பாளர் | 5500-175-9000 | 1.81 | 2 (இரண்டு) | 3.62 |
| 9 | உதவியாளர் | 4000-100-6000 | 1.25 | 4 (நான்கு) | 5.00 |
| 10. | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் | 3200-85-4900 | 1.01 | 2 (இரண்டு) | 2.02 |
| 11. | புள்ளி விவர குறிப்பாளர் (கணினி) | 3200-85-4900 | 1.01 | 2 (இரண்டு) | 2.02 |
| 12. | உதவி திட்ட அமைப்பாளர் | 5500-175-9000 | 1.81 | 1 (ஒன்று) | 1.81 |
| 13. | நகர திட்ட அலுவலர் | 8000-275-13500 | 2.63 | 1 (ஒன்று) | 2.63 |
| 14. | மண்டல திட்ட அலுவலர் | 6500-200-10500 | 2.10 | 4 (நான்கு) | 8.40 |
| | மொத்தம் | | | 52 (ஐம்பத்தி ரெண்டு) | 95.39 |
| | மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு | | | 104 (நூற்றி நான்கு) | 190.78 |

**<u>நகராட்சி நிர்வாக அலுவலக பணியிடங்கள் விவரம்</u>**

(ரூ. இலட்சங்களில்)

| வ. எண் | பணியின் பெயர் | ஊதிய விகிதம் | சுராசரி ஊதியம் | பணியிடங்கஙளின் எண்ணிக்கை | மொத்த செலவினம் வருடத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | பொது மேலாளர் (செ.பொ) | 10000-325-15200 | 3.06 | 1 (ஒன்று) | 3.06 |
| 2. | இணை பொது மேலாளர் (உ.செ.பொ) | 8000-275-13500 | 2.63 | 1 (ஒன்று) | 2.63 |
| 3. | உதவி பொது மேலாளர் (செ.பொ. கு.பொ) | 6500-200-10500 | 2.10 | 2 (இரண்டு) | 2.10 |
| 4. | பொது மேலாளர் (சீர்திருத்தம் இ.இ) | 10000-325-15200 | 3.06 | 1 (ஒன்று) | 3.06 |
| 5. | மேற்பார்வையாளர் | 5700-175-9000 | 1.85 | 1 (ஒன்று) | 1.85 |
| 6. | உதவியாளர் | 4000-100-6000 | 1.25 | 2 (இரண்டு) | 2.50 |
| 7. | புள்ளி விவர குறிப்பாளர் (கணினி) | 3200-85-4900 | 1.01 | 1 (ஒன்று) | 1.01 |
| | மொத்தம் | | | 9 (ஒன்பது) | 18.31 |

2. முதலாவதாக படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பசீலித்தபின் மேலே பத்தி ஒன்றில் தோற்றுவிக்கப்பட்ட மேற்கண்ட பணியிடங்களை முதற்கண் இரண்டாண்டுகளுக்கு தோற்றுவிக்கலாம் என்றும் அதற்குத் தேவையான சகலவினமான ரூ95.39 இலட்சத்தினை மதுரை மாநகராட்சிக்கும், ரூ95.39 இலட்சத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மத்திய அரசால் வழங்கப்படும் ஜவஹர்லால் நேரு தேசிய நகாப்புற புதுப்பித்தல் திட்டம் (ம) நிர்வாகம் மற்றும் மற்ற் செலவினங்களின நிதி பங்கீட்டில் ஈடு செய்யலாம் என்றும் மத்திய அரசின் நிதி பெறப்படும் வரை முதலில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் பொது நிதியிலிருந்து இச்செலவினத்தை ஈடு செய்யலாம் என்றும் மேலும் நகராட்சி நிர்வாக ஆணைய அலுவலகத்திற்கு இத்திட்டத்திற்கென தோற்றுவிக்கப்படும் பணியிடங்களுக்கு ஆகும் செலவினமான ரு18.31 இலட்சத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலத்தால் நிர்வகிக்கப்படும். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி III நிதியின் மூலம் ஈடு செய்யலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.135/JS/P/07 நாள் 22.06.2007 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

கே.தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்

1. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை—5
2. சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை—5
3. சம்பள கணக்கு அலுவலர் , சென்னை—9
4. மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை—18
5. மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை), சென்னை—18
6. உள்ளாட்சி தணிக்கை அலுவலர், சென்னை —9
7. நிதித் ( நநி()குவ) (சிஎம்பிசி) துறை, சென்னை —9
8. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வ.செ மா.ந.4) துறை, சென்னை—9

நகல்

1. ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை.
2. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்